# திறவுகோல்

2050 சித்திரை
மாத இதழ்

## செண்பக வனம்

நிர்வாணம் நிர்மூலம் அல்ல

---

கோடை வெயில்...

---

கல்வி சீர்வரிசை

---

அஞ்சாதீர் பெண்களே ! உலகம் உங்கள் வசமே...

---

வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# நிர்வாணம் நிர்மூலம் அல்ல



நிரஞ்சன்
மன்னார்குடி

ஞானத்தை அடைய ''நான் உடலும் அல்ல, நான் மனமும் அல்ல'' என்பதை உணரவேண்டும் என புத்தர், ஓஷோ போன்ற பல ஞானிகள் கூறுவதுண்டு... ஆனால் ஒரு சாமானிய மனிதனாக அமைதியாக வாழவேண்டும் என்றால் ''நாம் உடல் அல்ல'' என்பதை கட்டாயம் உணரத்தான் வேண்டும்.

மனிதர்கள் எந்தவொரு குற்றத்தையும் எளிதாக கடந்து சென்று விடுகிறார்கள். லஞ்சம், ஊழல், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளம் அழிக்கபடுவது, மீத்தேன் போன்ற நாசகார திட்டங்கள், நோயை உருவாக்கி மருத்துவம் பார்த்தல், திட்டமிட்டு சிசேரியன் செய்தல், கடத்தல், திருட்டு, கொலை என எத்தனையோ சமூக குற்றங்கள் இருக்கிறது.. இதை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் ஒரு சிலர் தான். இதை மக்கள் எளிதாக கடந்து சென்றுவிடுகிறார்கள். ஆனால் ஒரு கற்பழிப்பு குற்றம் நடந்தால் மட்டும் ஒட்டுமொத்த சமூகமும் கொந்தளிக்கிறது.. எதற்குமே வாயை திறக்காத இளைஞர்கள் கூட பாலியல் பலாத்காரம் என்றால் வெகுண்டெழுவார்கள்.

ஏனெனில் பெண்ணின் உடல் பாதுகாப்பின்றி இருப்பது தான் இவர்கள் எல்லோருக்கும் ஆகப்பெரும் பிரச்சனையாக தெரிகிறது. பெண்ணை பாதுகாக்க இவர்கள் வெகுண்டெழவில்லை. பெண்ணின் உடலை பாதுகாக்க தான் வெகுண்டு எழுகிறார்கள். ஏனெனில் பெண்ணின் உடலில் தான் நம் அனைவரின் கௌரவமும் இருக்கிறது என நம்புகிறார்கள். நமது மண் இன்னொருவனால் சூறையாட படும்போது வராத ஆத்திரம், பெண் இன்னொருவனால் சூறையாட படும்போது மட்டும் வருவது ஏன்? ஏன் பெண்ணின் உடலில் மட்டும் இவ்வளவு பாதுகாப்புணர்வை வைத்துள்ளோம்? ஒரு பாலியல் பலாத்காரம் நடந்தால் ஏன் ஆண் மட்டும் அதில் பெற்றவனாகவும், பெண் என்பவள் இழந்தவளாகவும் கருதுகிறோம்?

இந்த உலகில் ஆணும் சுதந்திரமாக இல்லை. பெண்ணும் சுதந்திரமாக இல்லை. இருவரின் சுதந்திரமும் பெண் உடலில் தான் இருக்கிறது. ஆணும் சரி பெண்ணும் சரி, இருவருமே அடிமை பட்டிருப்பது பெண்ணின் உடலில் தான்.

மனித இனம் தோன்றியபோது மனிதர்களில் ஆண் இல்லை பெண் மட்டுமே இருந்தாள். அமீபாவில் எப்படி ஆண் கிடையாதோ, அமீபா எப்படி உடலுறவு இன்றி பெண் அமீபாவாக தனது குட்டியை உடலில் இருந்து பிரித்தெடுக்குமோ, அதுபோல தான் மனித இனத்திலும் பெண் தானே கருவுற்று பெண் குழந்தைகளை மட்டுமே

பெற்றெடுத்தாள்.. பிறகு பரிணாம வளர்ச்சியில் பெண்ணின் பாலியல் தேவைக்காக தான் ஆண் படைக்கபட்டான். ஆகவே தான் மனிதர்கள் தாய் வழிச் சமூகமாக வாழ்ந்தார்கள். பெண்ணே மூலமானவள். உலகில் உள்ள ஒவ்வொரு குழந்தையுமே தாயின் வயிற்றில் பெண்ணாக தான் உருவாகிறது. கருவுற்று 45 நாட்களுக்கு பிறகு தான் இயற்கை ஆண் குழந்தையை ஆண் என தீர்மானிக்கிறது. அதுவரை அக்குழந்தை பெண் தான். அதனால் ஆண்களுக்கும் முலைகாம்பு இருக்கிறது. ஆணுக்கு முலை இருக்காது ஆனால் காம்பு இருக்கும். அந்த காம்பு ஆணுக்கு அவசியமற்றது. ஆண் பால் கொடுப்பது இல்லை. இருந்தாலும் ஏன் இருக்கிறது? தாய் கருவுற்று முதல் 45 நாட்கள் ஒவ்வொரு ஆணும் பெண்ணாக தான் இருந்தான் என்பதற்கு இதுவே சாட்சி.

பெண் உடலாக தோன்றி ஆண் உடல் ஆனவன், பெண் உடலை கட்டுபடுத்துவது, சித்திரவதை செய்வது, போகப்பொருளாக கையாள்வதை விட இயற்கைக்கு முரண் வேறொன்றும் இல்லை.. பெண்ணின் உடலை பெண்ணுக்கு எதிராக நிறுத்துவது என்பது மிக பெரிய பயங்கரவாதம். மனிதர்கள் உடலை உடையணிந்து மறைத்து கொண்டது நாகரீக வளர்ச்சி. ஆனால் பெண்ணின் உடல் மட்டும் மறைத்தே தீர வேண்டிய ஒரு கட்டாயம் என்பதும், பெண்ணின் உடல் மட்டும் பல விதிகளுக்கு உள்ளாவதும் நாகரீக வளர்ச்சி அல்ல, ஆணின் ஆணவம் மற்றும் அறியாமையின் வளர்ச்சி. இது ஆணாதிக்கம் அல்ல. ஆண் அடிமைத்தனம்.

பெண்களும் ஆண்களும் பெண்ணின் உடலை பற்றிய கற்பிதங்களில் இருந்து விடுதலை பெற வேண்டும். மாராப்பை, துப்பட்டாவை இழுத்துவிட்டு மார்பை மறைப்பது தான் ஒவ்வொரு கணமும் பெண்களின் சிந்தையாக இருக்கிறது. மிதிவண்டியில் பள்ளிக்கு செல்லும் எந்த மாணவியும் இயல்பாக செல்வதில்லை.. நம்மை எந்த ஆண் பார்க்கிறான், நம் ஆடை சரியாக இருக்கிறதா என்று பதட்டமாக சிந்தித்துகொண்டே ஆடையை ஓயாமல் சரி செய்துகொண்டே மனதளவில் இறுக்கமாக தான் செல்கிறார்கள்.

அந்த பெண்களின் தந்தையோ தாயோ அண்ணனோ இதை கவனிக்கிறார்களா? இல்லையா? அந்த பெண்ணிடம் நீ மனதளவில் சுதந்திரமாய் இரு!, இவ்வளவு இருக்கமாய் இருக்காதே!, உடல் மட்டுமே வாழ்க்கை இல்லை, உடலை மறைத்துக்கொண்டு இருப்பதையே உன் மன ஓட்டமாக வைத்துகொள்ளாதே! என்று சொல்வது அவர்களின் கடமை இல்லையா? முதலில் அவர்களிடம் அந்த புரிதல் இருக்கிறதா?

பெண்கள் அனைவரும் முகநூலில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முகநூலில் தங்கள் புகைப்படங்களை ஏன் பகிர்வதில்லை? முகப்பு பகுதியில் நாய்க்குட்டி படமோ, பூக்களின் படமோ, குழந்தைகளின் படமோ தான் வைத்திருப்பார்கள். தங்கள் புகைப்படங்களை வைப்பதில்லை. ஏன் பெண்களுக்கு மட்டும் அந்த அச்சம்? அந்த பெண்களின் உறவினர்களும் நண்பர்களும் (முக்கியமாக ஆண் நண்பர்கள்) முகநூலில் புகைப்படங்களை பதிவிடாதே என்று அச்சுறுத்துகிறார்கள். நிர்பந்திக்கிறார்கள். அந்த

புகைப்படத்தை தவறாக பயன்படுத்துவார்கள் என்ற அச்சம் இருக்கிறது. அந்த அச்சத்தை விட்டொழியுங்கள்.. உங்கள் புகைப்படத்தை திருடி என்ன செய்தாலும் பயம் கொள்ளாதீர்கள், கவலை கொள்ளாதீர்கள். அதனால் உங்களுக்கு எந்த இழப்பும் இல்லை.. எந்தவொரு அவமானமும் இல்லை.

பெண் வீதியில் நடக்கும்போது, காய்கறி வாங்க குனியும்போது மார்க்கெட்டில், பேருந்தில், ரயிலில் தூங்கும்போது, உணவகங்களில் உணவு சாப்பிடும்போது, கடற்கரையில் குளிக்கும்போது, ஆடை விலகும்போது என பல ஆயிரம் பெண்களின் புகைப்படங்கள் ரகசியமாக எடுக்கப்பட்டு சமூக வலைதளங்களில் பரவிக்கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் பயந்தால் பெண்கள் எதுவுமே செய்ய முடியாது. நாளை உங்கள் படமோ உங்கள் உறவினர் புகைப்படமோ உங்கள் தோழியின் புகைப்படமோ கூட வரலாம். அதற்க்கு எல்லாம் வருந்தி  அழுதுகொண்டிருக்க கூடாது. முக்கியமாக ஆண்கள் இதற்க்கு வருந்துவதையோ உங்கள் பெண்களின் அந்தரங்கமான புகைப்படம் இணையத்தில் வெளியானதால் எல்லாத்தையும் இழந்ததை போல் நிலைகுலைவதை நிறுத்துங்கள். ஏனெனில் இது கேமரா உலகம்.

இதுபோன்ற குற்றங்களை தடுக்கும் முயற்சியில் தான் நம் சமூகம்  ஈடுபடவேண்டுமே தவிர, இதையெல்லாம் இழப்பாக கருத கூடாது. லட்சகணக்கில் இந்திய சாமானிய பெண்களின் நிர்வாண காணொளி, குளியலறை காணொளி, காதலனுடன் அல்லது கணவனுடன் உடலுறவு கொள்ளும் காணொளி இணையத்தில் உள்ளது.. இதில் பல காணொளி தன் காதலனால் எடுக்கப்பட்டு பதிவிட பட்டது  தான். உங்களுக்கே தெரியாமல் உங்கள் நிர்வாணம் இணையத்தில் வெளியானால் துவண்டுபோகாதீர்கள். எதிர்த்து போராடுங்கள். இல்லை கடந்து செல்லுங்கள். அதை இழப்பாக கருதாதீர்கள்.

பொள்ளாச்சி சம்பவத்தில் 200 க்கும் மேற்பட்ட பெண்கள் மௌனம் காத்தது ஏன்? நிர்வாணமாக காணொளி எடுத்து மிரட்டினால் இத்தனை பெண்கள் அடிப்பணிக்கிராா்களே ஏன்? அதை வீட்டில் சொல்ல கூட பயம் என்றால், அதெல்லாம் ஒரு குடும்பமா? குடும்பங்கள் ஏன் கௌரவத்தை குடும்ப பெண்களின் உடலில் வைத்துள்ளது? பொள்ளாச்சி போன்ற ஒரு பாலியல் குற்ற சம்பவம் நடந்தால் குற்றவாளிகளை நடுரோட்டில் தூக்கில் போட வேண்டும். அவர்கள் ஆணுறுப்பை வெட்ட வேண்டும் என்றெல்லாம் சொல்பவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு நேர்ந்த கொடுமையை வீட்டில் சொல்வதற்கு தயங்கும்படி இருக்கும் நம் சமூகத்தை கேள்வி கேட்பதுண்டா? தூக்கில் போட வேண்டியது நம் சமூகத்தை தான்.

ஒரு கதை சொல்கிறேன்......

’ஒரு கணவனும் மனைவியும் இருச்சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு வண்டி குறுக்கே வந்துவிட்டது. உடனே வண்டியை நிறுத்தியதில் வண்டி சறுக்கி

கீழே விழுந்தது. அந்த கணவன் மனைவியும் கீழே விழுந்தார்கள். மக்கள் கூட்டம் கூடியது. இருவருக்கும் பெரிய அடி இல்லை. சிறு சிறு காயங்கள் தான். கீழே விழுந்த கணவர் தட்டு தடுமாறி எழுந்தார். தன் மனைவியை பார்த்தார். மனைவி கீழே விழுந்ததில் சேலை விலகி இருந்தது, மாராப்பும் விலகி இருந்தது. சுற்றிலும் மக்கள் கூட்டம். அவர் உடனே தன் மனைவியை தூக்கவில்லை. அவருக்கு எங்கே அடிபட்டிருக்கு என்று பார்க்கவில்லை. அவர் முதல் வேலையாக தன் மனைவியின் ஆடையை தான் சரி செய்தார்.'

இது தான் ஆண்களின் மனப்பாங்கு. அந்த கணவருக்கு தன் மனைவியின் உடல் மீது அக்கறை இல்லை. உடல் மீது தான் அக்கறை. அவர் உடலை பாதுகாக்க முற்படவில்லை. உடலை பாதுகாக்க தான் முற்பட்டார்.

இன்னொரு கதை சொல்கிறேன்...

'ஒரு அப்பாவுக்கு ஒரு 16 வயது மகன் ஒரு 20 வயது மகள். ஒருநாள் அவர் மகன் சில வாலிபர்களால் தாக்கபட்டான். அவன் மண்டை உடைந்தது. மருத்துவமனையில் சேர்க்கபட்டான். அந்த அப்பா ஆத்திரபட்டார். அவர் மகனிடம் ''திருப்பி அடிக்கவேண்டிய தானடா'' என்று சத்தம் போட்டார். காவல் நிலையம் சென்று புகார் செய்து நீதிமன்றம் வரை சென்று தண்டனை வாங்கி கொடுத்தார். தன் மகனிடம் ''என் மகனாக இருந்துகொண்டு அடிவாங்கி வருகிறாயே! இனிமேல் திருப்பி அடித்துவிட்டு வா. நாம் வீர பரம்பரை'' என்றார். மற்றொரு நாள் அவர் மகள் சில வாலிபர்களால் பாலியல் பலாத்காரம் செய்யபட்டாள். அதை அறிந்ததும் வீர பரம்பரையை சேர்ந்த அப்பா ''ஓஓஓஓஓ.....'' என்று அழுதார். அன்று இரவே தன் மகள் மகனுடன் தூக்கில் தொங்கி செத்தார்.'

ஏன் பாலியல் பலாத்காரம் மட்டும் குடும்பத்துக்கே இழப்பாக தோன்றுகிறது. பாலியல் பலாத்காரம் என்பது பெண்ணுக்கு நடந்த இழப்பு அல்ல.. அதுவும் அவர் மகனுக்கு நடந்தது போல் ஒரு தாக்குதல் தான். அதை அவமானமாக கருதாமல் தாக்குதலாக கருதியிருந்தால் எதிர்த்து போராடியிருப்பார்.

நம் வீட்டு பெண் பாலியல் பலாத்காரம் செய்யபட்டால் ஏன் இவ்வளவு வருந்துகிறீர்கள்? ஏன் உயிரே போனது போல் தவிக்கிறீர்கள்? ஏன் குடும்பத்தோடு தற்கொலை செய்து சாகுரீர்கள்? பெண்களே! உங்கள் உடல் நிர்வாணமாக காணொளி எடுக்கபட்டிருந்தால் அடிபணிய கூடாது.. பூலான் தேவி போல் சீறிபாய வேண்டும்.. பூலான் தேவி பெண்களுக்கான முக்கியமான முன் உதாரணம். ஆண்களே! உங்கள் மனைவியோ, காதலியோ, அக்காவோ, தங்கையோ, தோழியோ, மகளோ, மருமகளோ பாலியல் பலாத்காரம் செய்யபட்டால், நிர்வாணமாக புகைப்படமோ, காணொளியோ எடுக்கபட்டால் பதறாதீர்கள்.

நீங்கள் எதையும் இழக்கவில்லை, கௌரவம் பாதிக்கவில்லை, உங்களின் கௌரவத்தை

உங்கள் வீட்டு பெண்களின் உடலில் வைத்திருப்பதை அகற்றுங்கள். குற்றவாளிகளை தீவிரமாக தண்டிக்க முற்படுங்கள். இயக்குனர் ராம் ஒரு கட்டுரையில் இவ்வாறு எழுதியிருந்தார் ‘‘குற்றாலத்தில் நிர்வாணமாக குழிக்கும் ஆண்களின் புகைப்படம் ஒரு நாளிதழில் முகப்பு பக்கத்தில் வந்தபோது அதில் ஒரு ஆண் கூட தற்கொலை செய்துகொள்ளவில்லை. பெண்கள் மட்டும் ஏன் தற்கொலை செய்துகொள்கிறார்கள்?‘‘

பெண்களே! உடல் மட்டுமே வாழ்க்கை இல்லை. பெண்ணாக பிறந்ததால் உன் உடலை மறைத்து வைப்பதே உன் வாழ்நாள் கடமை இல்லை. உங்கள் நிர்வாணம் உங்களை நிர்மூலம் ஆக்கிவிடாது. நிர்வாணம் நிர்மூலம் அல்ல..

- நிரஞ்சன்

---

## உனக்குள் மூழ்கி

உன்னைக் கொண்டதிலிருந்து
நடுயாமத்தைத் தாண்டியும்
உயிர்த்திருக்கிற
எல்லா இரவுகளிலும்
பௌர்ணமியோடு கூடி
ஆழப்புணர்ந்து சில்லிடுகிறாய்
பனிக்காற்றின் கூரிய
விரல்முனைகளால்
என்வசம் நீ!
✸
தனிமையில் இரசித்துக்கொண்டிருக்கும்
பெருங்கடல் அலைகள் மேல்
துள்ளி விளையாடுகிறாய்
மீன்களைப்போல்
குறும்புகளால் நீ...
வீட்டிற்குவந்து
கை கால் முகம்கழுவி
அறைக்குள் முடங்குகையில்
தூங்கவிடாமல்
விழுங்கிக் கொண்டிருக்கின்றன
ஆந்தைகளும் நரிகளும்
வௌவால்களும் அலைந்திசைக்கும்
உன் விழிப்புணர்ந்த
தாக்குதல்கள்!
✸
நாளைமுதல் நிச்சயம்
வாய்க்கப்போவதில்லை
இதயம் தகர்த்து வீழ்த்தும்
உன் அலங்கரித்த வருகை....
குழந்தை மொழிகளால்
கொலுசொலி சிணுங்களால்
செல்ல சண்டைகளால்
செவ்வாய் சுழிப்புகளால்
நேய சுடரொளி மின்னி
நீ அமர்ந்திருக்கும் இருக்கையில்
உன்னைக் காணாமல்
ஏங்கும் என் விழிகள்
விரைவில் பார்வையற்றுப் பட்டும்
போகலாம் ...
நிலவில்லா இரவாய்
நிழலில்லா சாலையாய்
மலரில்லா வனமாய்
மழையில்லா நிலமாய்
மனமின்றி அழியப்போகிறேன்
நீயற்ற நரக அறைக்குள்
நடைபிணமாய் நான்!

பொன்.தெய்வா
ஐவேலி
8940181811

# கோடை வெயில்..?!

கோடை வெயில்
தாங்க முடியவில்லை
என்று எங்கெங்கும் மானுட புலம்பல்
பனி, மழை, இரவு, வசந்தம் என
இவற்றை மட்டுமே கவிதை வடிக்கும்
கவிஞர்களால், கதிரவன் அடைந்த
கோபம் தான்
இந்த வெயில்!

பள்ளி விடுமுறை நாட்களில்
கோடையென்றால்
கொண்டாட்டம் தான்...!
அப்பாவிடம் ஏற்கனவே போட்ட
ஒப்பந்தப்படி
சென்று வருவோம்
குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி,
ஆழியாறு, தேக்கடி என..!

உச்சி வெயிலில்
மதியம் சாப்பிட்ட பின்பு....
வேப்ப மரத்தின் அடியில்
கயிற்று கட்டிலில் –
படுத்து தூங்கும் சுகம்!

பனை விசிறி
வீசியப்படியே ..?
மாலையில் –
தெரு பஞ்சாயத்து பேசும் அப்பா!

ஞாயிற்றுக் கிழமை ஆனால்,
அப்பாவோடு வயலுக்கு சென்று
இளநீர் குடித்து ஆழ் குழாய் நீரில்
குளித்து வீட்டுக்கு வந்தால்,
அம்மியில் அரைத்து,
அம்மா வைத்த அயிர
மீன் குழம்பு!
ஐந்து முறை சாப்பிட்ட
நினைவுகள்.

கோடையில் வற்றிய வாய்க்காலில்
பள்ளம் தோண்டி சுத்தமான ஊற்று
நீரை குடித்து மகிழ்ந்த தருணங்கள்.

இளமையில் கோடையில்
கிராமங்களில் நாம் வாழ்ந்த வீடுகள்,
வெயிலை சாட ஒருபோதும்
காரணமாக இருக்கவில்லை.

எல்லாம் இருந்தும் இந்த நகரம்தான்
ஒவ்வொரு கோடையிலும்,
கூடும் வெயிலின் கொடுமையில்
நமக்கு சொல்கிறது,
நாம் சுகமாய் வாழ,
நாம் அஞ்சாமல் அழித்த,
அத்தனை இயற்கை பசுமைகளின்
சாபமே
இந்த வெயில்....!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி


மணிபாரதி தங்க சுந்தர்

# அன்புள்ள அப்பாவிற்கு....

நேசம் வைத்து நெஞ்சில் சுமந்தாய்...!
பாசம் வைத்து பசியை தீர்த்தாய்...!
உழைப்பை தந்து உயிரை காத்தாய்..!

நோய் வந்து துவளும் போது தாங்கி பிடித்து காத்தாய் வேலனாக-துள்ளி குதித்து ஓடும்போது துணை நின்றாய் தோழனாக....!

மதிப்பவரிடம் பணிந்தும் எதிர்ப்பவரிடம் துணிந்தும் நடக்க கற்றுக் கொடுத்தாய்..!
எதிரிக்கும் நன்மை செய்து பல புண்ணியங்களை எமக்கு பெற்றுக் கொடுத்தாய்...!

கண்டிப்பிலும் கடுஞ்சொற்களிலும் உனக்கு எம் எதிர்கால சிந்தனையே..,
இன்று என் வெற்றிக்கு எல்லாம் அதுவே உறுதுணையே...!

அனுதினமும் உழைத்து வேர்வையில் குளிரூட்டினாய் மண்ணை...!

கிடைத்த பணத்தில் அழகுப்படுத்தினாய் என்னை...!

வெறும் வாழ்த்துகளை சொல்லிவிட்டேன் வார்த்தையில்-உன் தியாகங்களை போற்றுவேன் என்றும் என் வாழ்க்கையில்....

- மணிபாரதி தங்க சுந்தர்











# கல்வி சீர்வரிசை

பொதுவாக பெண்ணை கட்டி கொடுக்கும் பெண் வீட்டார், மாப்பிளை வீட்டிற்கு சீர் வரிசை வழங்குவார்கள், தங்கள் பெண் புகுந்த வீட்டில் கஷ்டப்பட கூடாது என்ற நல்ல எண்ணத்தில். அதே போல் பதிலுக்கு மாப்பிள்ளை வீட்டாரிடம் அவர்கள் எதிர்பார்ப்பது, தங்கள் பெண்ணை நன்றாக வாழ வைக்க வேண்டும் என்பதே. அதேபோல் தாங்கள் படித்த பள்ளிக்கு ரூ. 1 லட்சம் மதிப்பில் சீர் வரிசை வழங்கிய முன்னாள் மாணவர்கள்...!!

மன்னார்குடி அருகே கீழத்திருப்பாலக்குடி அரசுப்பள்ளிக்கு ரூ.1 லட்சம் மதிப்பில் சீர்வரிசை பொருட்களை கிராம மக்கள் ஊர்வலமாக வந்து வழங்கினர். மன்னார்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கீழத்திருப்பாலக்குடி அரசு ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் 53 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். எண்ணிக்கை குறைவால் மூடும் நிலைக்கு தள்ளப்பட்ட இப்பள்ளி, கிராம மக்கள் முயற்சியால் மேம்படுத்தப்பட்டு கூடுதல் வசதிகளுடன் புதுப்பொலிவுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியின் கூடுதல் வளர்ச்சிக்காக பள்ளியில் படித்த பழைய மாணவர்களின் முயற்சியால் கிராம மக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் ஆகியோர் இணைந்து பள்ளிக்கு அடிப்படை தேவையான மடிக்கணினி, விளையாட்டு சாதனங்கள், அறிவியல் உபகரணங்கள், மின்விசிறி உள்ளிட்ட ரூ.1 லட்சம் மதிப்பில் சீர்வரிசை பொருட்களை கிராம மக்கள் ஊர்வலமாக வந்து பள்ளி தலைமையாசிரியரிடம் வழங்கினர்.

மேலும் இப்பள்ளியின் மேம்பாட்டிற்காக கிராம மக்கள் தொடர்ந்து தங்களால் இயன்ற நிதி உதவியும் வழங்கி வருகின்றனர்.

நகரத்து கல்விதான் சிறந்தது என்று அதை நோக்கி கல்வி கற்க படை எடுக்காமல் கிராமத்து பள்ளியில் பயின்றாலும் வாழ்வில் உயர்வே என்பதை உணர்ந்து இப்பள்ளி தொடர்ந்து செயல்பட அனைவரும் ஒன்றுபட வேண்டும். கிராம மக்கள் உதவி செய்வது மட்டுமின்றி தன் வீட்டுக் குழந்தைகளையும் இப்பள்ளியில் சேர்க்க வேண்டும்..

இந்த பள்ளியும் கிராமத்து மக்களின் உதவும் உள்ளமும் வளம் பெற வாழ்த்துகள்!...

தமிழ் கல்வியை ஆதரிப்போம்!.. தமிழை வளர்ப்போம்!..

பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# சுமையான கருவறை

பத்தியங்கள் பலவிருந்து
பதிவிரதைத் தவமிருந்து
எத்தனையோ நோன்பிருந்து
இடிப்பொடிந்து
சுமந்திருந்தேன் கருவாக!

பசித்தவேளை துடித்திருந்து
பால்மார்பைத் திறந்தளித்து
நடுநிசிகள் கண்விழித்து
நாளுக்கொரு கனவுகண்டு
தோள்மீதும் மடிமீதும்
தூக்கிச் சுமந்தேன் மகவாக!

கனிவோடு அரவணைத்துக்
கட்டிமுத்த மழைநனைத்து
இன்னல்களை நானேற்று
இன்பங்களை உனக்களித்துச்
தங்கமாக வளர்த்திருந்தேன் வாழ்வாக!

நாளுக்கொரு புத்தாடை
நாக்கினுக்கோ சுவையுணவு
செலவுக்குப் பணமுடிப்பு
சென்றுவர மோட்டாரு
பார்த்ததெல்லாம் வாங்கித்தந்தேன்
மகிழ்வாக!

மணமாகா நாட்கள்வரை
மரியாதைக்குப் பஞ்சமில்ல
மறுவீடு போனபின்னால்
மதிப்பிழந்தேன் தெய்வமெல்ல,
தலையணை மந்திரத்தால்
தாயைநாயாய் ஆக்கிவிட்டாய்.

தலைப்பிரசவ நோவையெல்லாம்
தாரமுந்தாணையில் தூக்கிலிட்டாய்.

அமுதளித்த நெஞ்சைநெட்டி,
அனாதையாய் தள்ளிவிட்டாய்
தேள்கொடுக்கால் உயிரைக்கொட்டி
தினந்தினம் கொல்லியிட்டாய்.

தாய்ப்பாச வேரறுத்துத்
தனிமையிலே வாடவிட்டாய்.
தளர்ந்துவாடும் தேகத்தோடு
தரங்கெடவே தள்ளிவைத்தாய்!

மாளிகையில் பெற்றத்தங்கம்
மகராசனாய் வாழ்ந்தினிக்க
மாடிப்படி கீழேக்கூட
மனசுயில்லைத் தங்கவைக்க.
ஊட்டியூட்டி வளர்த்த கைகள்,
ஒருவேளைக்குக் காத்திருக்கு.
ஊசிப்போன உணவைத்தின்று,
ஒட்டியவயிறு பிழைச்சிருக்கு!

ஆர்ப்பரிக்கும் செல்வத்தோடு,
ஆண்டிருந்த காலம்போயி
ஆதரவற்றோர் இல்லங்களே,
அடைக்கலமா ஆகிப்போச்சி!
பேரக்குழந்தைகளை,
தூரநின்று கொஞ்சலாச்சி.
வாரக்கடைசியில்தான்,
பெற்றமக்கள் பாசமாச்சி.
யாரை நொந்துகொள்ள!
எமனுக்கும் கருணையில்ல.

யாரோடும் பழகாம
ஏங்கித்தீயும் நெஞ்சம்மெல்ல
சுகமான உறவென்னைச்
சுக்குநூறாய் உடைத்தெறிந்தாய்!
சுமையானக் கருவறைக்குச்
சூறாவளியைப் பரிசளித்தாய்!

பொன்.தெய்வா
ஐவேலி

# யாசக சிறுவனின் வாசகம்...!!!

சுமையென நான்
சுகத்திற்கு
உதிரப்பட்டேன்!

யாசகன் என்று
வீதியில்
பேசப்பட்டேன்!

அன்னை மடி
என்றும் குப்பை
என்றேன்!

ஐயன் யார் என்று
கேட்க எச்சம்
என்றேன்!

மிச்ச மீதி எல்லாம்
வந்து விழுந்த என்
மேல் பள்ளி முட்டை
என்றும், தீட்டு என்றேன்!

கொடுப்பவர்கள் யாரும்
கேட்பது இல்லை
படிக்கிறாயா என்று!

கேட்பவர்கள் யாரும்
கொடுப்பதில்லை
உண்கிறாயா என்று!

என்ன செய்வது
சுற்றி திரிகிறேன்
என்னை சுமந்தவளை
முதுகில் சுமந்தப்படி,
இருந்தும் சொல்கிறார்கள்
நான் அனாதை என்று.....!!!

ஆரூர் கவிஞன் தீன்
பொதக்குடி

---

# பருவத்துறவு

நான்கு சுவற்றுக்குள் நம்பிக்கை
வளர்த்த காதல், இன்று
காம இச்சையாய் காட்சிப்படுகிறது...
பூப்படைந்த பெண் பூமித்தாயை
நோக்க, காதல் காமவெறியனின்
கைகள் கட்டுப்பாடற்று அவள்
மெல்லுடலை மேய்கிறது....
பருவம் வந்த பூமகளோ,
ஆசை வார்த்தை பேசிய அந்த
ஆடவனின் மோச வலையில் சிக்கி,
மோகத்தில் கட்டுண்டு,
வேகமாய் துறக்கிறாள்....
உடையையும் உயிரையும் ......

கவிஞர் ந.மாமலைவாசன்
(பொள்ளாச்சி வன்புணர்வில்
பாதிக்கப்பட்ட சகோதரிகளுக்கு
சமர்ப்பணம்)

# அஞ்சாதீர் பெண்களே ! உலகம் உங்கள் வசமே...



மகாலெட்சுமி

ஆங்காங்கே ஆணவக் கொலைகளும் நடக்கத்தானே செய்கிறது!. படித்து பட்டம் பெற்றப் பலரும் கூடத் தனது சாதி பெயரை தனது பெயரோடு இணைத்து போட்டுக் கொள்வதை பெருமையாக தானே நினைக்கின்றனர்.

''திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' போல தான் ''மனிதனாய் பார்த்து திருந்தாவிட்டால் சாதி மத பேதங்களையும் ஒழிக்க முடியாது''.

சாதி மத பேதங்களை கூறவேண்டுமானால் ஏராளமானவை உள்ளன. ஆனால் அதனால் மாற்றங்கள் எதுவும் ஏற்படாது. அம்பேத்கார் பெரியார் போன்றோரால் மாறாதவர்கள் எனது இரு வரியால் எப்படி மாறுவார்கள். சரி நாம் தலைப்பிற்கு வருவோம். வேறு சில சட்டங்களை குறித்து பார்த்தோம் அல்லவா.

ஆம் குழந்தை திருமண ஒழிப்பு சட்டம். இச்சட்டம் ஓரளவுக்கு செயல்பட்டாலும், இன்றும் 18 வயதிற்கு கீழுள்ள பெண் குழந்தைகள் பலவந்தமாக திருமணம் செய்து வைக்க படுகிறார்கள். எந்த ஒரு சட்டமும் முழுமை அடைய வேண்டுமெனில் பொதுமக்களாகிய நமது ஒத்துழைப்பு தேவை . வரதட்சணை ஒழிப்புச் சட்டம், இச்சட்டம் இன்றளவிலும் பிரசித்தி பெற்றது. ஏனெனில் மணமகன் தேடும்பொழுது நல்ல வசதி படைத்தவரா, நல்ல உத்தியோகத்தில் உள்ளவரா, நில புலன்கள் கொண்டவரா என்றெல்லாம் தேடுபவர்கள் நல்ல மனம் கொண்டவரா, பெண்ணை மகிழ்ச்சியாக வைத்து கொள்வாரா என்று பார்ப்பதில்லை.

அவர் படித்ததற்கான முதலீடை மணநாளில் பெற்றுக்கொள்ள விரும்புகிறார். இதில் யாரை குற்றம் சாட்டுவது. ஒருவரேனும் தன் மனசாட்சிக்கு உண்மையாக நடந்துகொண்டால் இதுபோன்ற சங்கடங்களை தவிர்த்து வாழலாம். ஒவ்வொருவரும் தான் உழைத்து பெறுவது மட்டும் தனக்கு போதுமானது என நினைத்தாலே போதும் இந்த நிலை மாறிவிடும்.

அலுவலகங்களில் பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் வன்கொடுமையை தடுக்கும் தடுப்பு சட்டம். இச்சட்டம் பெரும்பாலான தனியார் அலுவலகங்களில் நன்றாகவே இயங்கி வருகின்றன. ஆனாலும் பெண்கள் வெளியில் சொல்லாமல் விட்டால் அவர்களுக்கு நடக்கும் அநீதிகள் தெரிவதில்லை. சிலர் குடும்ப சூழல் காரணமாக அவர்களுக்கு நடக்கும் அநீதிகளை மனதிற் வைத்துக்கொண்டே துன்புறுகிறார்கள். சிலர் சமூகத்திற்கு பயந்து எதையும் வெளியில் சொல்வதில்லை.

அவ்வாறு மனதைரியம் கொண்டு வெளியில் கூறும்போது ‘‘ அப்போதே ஏன் கூறவில்லை, இப்போது எதற்க்காக கூற வேண்டும்‘‘ என்று அப்பெண்ணின் மீதே அவதூறு கூறுகிறது இச்சமூகம்.

என் பள்ளி பருவத்தில் நடந்த ஓர் நிகழ்வை தங்களோடு பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடன் படித்த ஓர் பெண் அவள் தாயிடம் தன்னை ஓர் பையன் தினமும் பார்த்து சைகையால் கேலி செய்வதாக புகார் செய்தாள். அதற்க்கு அவள் தாய் அப்பெண்ணிற்கு தைரியம் சொல்வதை விடுத்து ‘‘ அவன் உன்னை தான் பார்க்கிறான் என உனக்கு எப்படி தெரியும், நீயும் அவனை பார்த்துள்ளாய். பள்ளிக்கு அனுப்புவது கல்வி கற்பதற்க்கே தேவையற்றதை  தேவையற்றதை பார்த்து வருவதற்கல்ல என்று அறிவுரை கூறினார். இப்படிப்பட்ட வார்த்தைகளை கேட்டபின் பிள்ளைகளுக்கு எவ்வாறு தங்கள் பிரச்சனைகளை பகிர்ந்து கொள்ள தோன்றும். சிந்தியுங்கள் ! பெண்கள் தலையை குனிந்து நடக்க பிறக்கவில்லை, அவர்களுக்கென்று ஓர் லட்சியம் ஒரு கனவு ஒரு வாழ்க்கை இருக்கிறது. வாழ விடுங்கள், பாவம் பெண்கள்.

கடைசியாக சமீபத்தில் இயற்றப்பட்டு பெரும் சர்ச்சைக்குள்ளான சட்டத்தை பற்றி பார்க்கவிருக்கிறோம்.  சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதித்து வழங்கிய தீர்ப்பு குறித்து தான் பார்க்க இருக்கிறோம். எதனால் இதற்க்கு அத்தனை எதிரிப்புகள். கடவுள் எப்படி ஒருபால் மனிதர்களுக்கு மட்டும் சொந்தமாவார்.  கடவுள் என்பவர் அனைவருக்கும் கடவுள் தானே. அப்படி இருக்கையில் எதற்க்காக இவ்வளவு ஆர்ப்பாட்டம். ஒன்றுமே இல்லாத வாழ்க்கை இது. நாளை விடியும் பொழுது உயிர் நம்முடலில் இருக்கும் என்ற நிலையில்லாத வாழ்க்கை இது. இதற்க்கு ஏன் இத்தனை போராட்டம், மற்றவர் மனதை புண்படுத்திடும் செயல். இவை யாரையும் மகிழ்விக்க போவதில்லையே.

பெண்களுக்கு மாதவிடாய் வருவது தான் கோவிலுக்கு அனுமதிப்பதில் உள்ள பிரச்னை என்றால் ‘‘ பெண் கடவுள்களை‘‘ எதற்க்காக கோவிலில் வைத்து பூஜை செய்ய வேண்டும்? மாதத்தில் மூன்று நாட்கள் கோவிலுக்கு வெளியில் வைத்து பூஜை செய்யலாமல்லவா? அந்த மாதவிடாய் தான் பிரச்னை என்றால் ஒன்பது மாதங்கள் அந்த குருதியில் ஊறி வளர்ந்த எல்லா மனிதனும் தீட்டு தானே, அவர்கள் மட்டும் எப்படி கோவிலுக்குள் செல்லலாம்.

யார் மனதையும் நோகடிப்பதற்க்காக கேட்கவில்லை. இச்சமூகம் சேர்ந்து நாளொன்றுக்கு புதுப்புதுச் சட்டங்கள் பல இயற்றி பெண்களை நோகடித்து கொண்டு தானே இருக்கிறது. அதனை எதிரித்து ஓர் பெண்  கேட்க்கிறாள் எனில் அவளது பெயரை ஊரே ஏளனம் செய்து பலவீனமாக்கிவிடுகிறது. என்று தான் விடியும் பெண்களுக்கான சுதந்திரம்.

இதில் இன்னும் கொடுமை பெண்களே தனக்கு எதிராக நடக்கும் கொடுமைகளுக்கு ஆதரவாக இருப்பது தான். ஒருசில பெண்கள் கூறுகிறார்கள் பெண்கள் சபரிமலைக்குள்

நுழைந்தால் பெரும்பாவம் தெய்வ குற்றம் ஆகிவிடும் என்றும், நாட்டில் எவ்வளவோ கோயில்கள் இருக்கையில் அங்கு தான் சொல்லவேண்டுமா என்றெல்லாம் கேட்க்கிறார்கள். எவ்வளவோ கோயிலுக்கு சென்று வருகிறோம் அங்கெல்லாம் தெய்வக்குற்றம் ஆவதில்லையே. இவ்வாறு செய்தால் கடவுள் உலகையெல்லாம் அழித்துவிடுவார் எனில் நாட்டில் பலர் பல பாவங்களை செய்து கொண்டு சுதந்திரமாக வாழ்ந்து கொண்டு தானே இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் ஏன் தண்டிக்கப்படவில்லை? பச்சிளம் குழந்தைகளை சீரழித்து கொள்பவர், ஆணவ கொலை செய்பவர், சமூக விரோதிகள், மக்கள் பணத்தை சுருட்டுபவர். யாவரும் நலமுடன் தானே இருக்கிறார்கள். அவர்களை தண்டிக்கத்த கடவுள் ஏன் பெண்கள் ஆலயத்திற்கு சென்றால் மட்டும் உலகை அழிக்கப்போகிறார்.

சிலரோ ஐயப்பன் பிரம்மச்சர்யம் மேற்கொண்ட கடவுள் அதனால் செல்லக் கூடாது என்று கூறுகின்றனர். அப்படி பார்த்தல் ஆஞ்சிநேயரும் பிரம்மச்சர்யம் மேற்கொண்டவர் தானே அவர் அலையத்திலுள்ள பெண்கள் அனுமதிக்க படுகின்றனரே. இவற்றையெல்லாம் தாண்டி சிலரோ சபரிமலைக்கு பெண்கள் செல்வது ஆண்கள் கழிப்பறைக்குள் பெண்கள் செல்வதற்கு சமம் என்கின்றனர். ஆலயத்தை கழிப்பறையுடன் ஒப்பிடுவதற்கான காரணம் என்ன? கழிப்பறையில் செய்வதை கோயிலிலும் கோயிலில் செய்வதை கழிப்பறையிழும் செய்ய இயலாதே. அதுவும் பத்துவயதிற்குட்பட்ட சிறுமிகளும் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண்களும் ஆண்கள் கழிவறைக்கு செல்லலாமா? இவர்களது சிந்தனை சிறிதும் எனக்கு விளங்கவில்லை.

இந்த பிரச்சனையை மத அரசியலாகவும் சிலர் முயல்கின்றனர். அதையும் நாம் நம்பி நமக்குள் நாமே கலவரம் உருவாக்கி கொள்கிறோம். யாருக்கேனும் ஏதேனும் லாப நஷ்டங்கள் உள்ளதா இதுகுறித்து சண்டை போட்டுக்கொள்வதில். இந்த போராட்டத்தில் சில உயிர்களும் பலியாகியுள்ளன அவர்கள் குடும்பத்தை யார் காப்பது. இவற்றையெல்லாம் சிந்திக்காமல் எதற்கு இந்த கலவரங்கள் போராட்டங்கள்.

சபரிமலைக்கு சென்று வாட்ச் பெண்ணை அவரது மாமியார் அடித்து துன்புறுத்தியதாக செய்தி கேள்விப்பட்டேன். ஏதை எதற்க்காக செய்கிறோம் என தெரியாமல் பெண்களே பெண்களுக்கு எதிரியாக இருப்பின் பெண்கள் வாழ்வில் எந்த ஒரு மாற்றமும் வந்துவிடாது. இவ்வாறு செய்தால் தெய்வ குற்றமாகிடும், கடவுள் தண்டித்து விடுவார் என கூறி மனிதர்களே மனித வாழ்வியலை அழித்து கொண்டிருக்கிறார்கள். அந்த காலத்தில் பெண்களை மாதவிடாய் காலத்தில் வேலை ஏதும் கொடுக்காமல் கோயிலுக்கு செல்ல அனுமதிக்காமல் இருந்ததற்கு பல காரணங்கள் உண்டு. அந்த காலத்தில் தற்பொழுது உள்ளதுபோல் விடாய்க்கால அணையாடை (Sanitary Napkin) வசதிகள் இல்லை மாறாக பெண்கள் துணி சாம்பல் போன்ற சுகாதாரமற்ற முறைகளையே பின்பற்றி வந்துள்ளனர். அவ்வாறு இருக்கையில் அப்பெண்களால் வெளியில் நிம்மதியாக சென்று வர முடியாது. அவர்கள் சங்கடமாகவே உணர்வார்கள். ஆனால் இன்று ஏறக்குறைய பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பெண்கள்

விழிப்புணர்வோடு சுகாதாரமான முறையை கடைபிடிக்கின்றனர் (சிலப்பகுதிகளில் மட்டும் இன்னும் முழுமையாக இல்லை).

எனவே இந்நிலை மாறவேண்டும். இந்நிலை மாறுவதற்கு பெண்கள் மனதில் மாற்றம் வேண்டும். ஒருவிடயத்தை செய்வதற்கு முன் ஏன் செய்கிறோம் எதற்க்காக செய்கிறோம் என்று உணர்ந்து செய்ய வேண்டும். தொன்றுதொட்டு செய்கிறார்கள் என்பதற்க்காக அர்த்தமற்று செய்யவேண்டும் என்று அவசியமில்லை.

மிகுந்த கட்டுப்பாடுகளோடு வளர்க்கப்பட்டிருந்தால் வேலு நாச்சியார், அன்னை தெரசா, கல்பனா சாவ்லா, மேரி கேம், மித்தாலி ராஜ், ஸ்மிர்தி மந்தனா, சானியா மிர்சா இன்னும் ஏராளமான பெண் சாதனையாளர்கள் உருவாகியிருக்க மாட்டார்கள். எனவே பெற்றோரும் இளம்பெண்களுக்கும் ஓர் வேண்டுகோள் விடுக்கிறேன். உங்கள் வீட்டு பெண்களுக்கும், உங்களை சுற்றியிருக்கும் பெண்களுக்கும் கட்டுப்பாடுகளை விடுத்து துணிந்து வாழ்வதற்கு உதவுங்கள். இன்னொரு வீட்டில் சென்று எப்படி வாழ்வது என கற்றுக்கொடுப்பதை விட பாதுகாப்பற்ற நிலையிலும் தன்னை தானே காத்துகொண்டு யாரையும் சார்ந்து வாழாமல் இருக்க கற்று கொடுங்கள். ஒவ்வொரு பெண்களும் அவரவர் துறைகளில் சாதனைகள் பல புரிவார்கள். பெண்கள் பூப்படைவதை கொண்டாடுவதை விடுத்து அவர்களின் திறமையை கொண்டாடுங்கள் நிச்சயமாக வாழ்வில் அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

யார் மனத்தையேனும் துன்புறுத்தியிருந்தால் மன்னிக்கவும். கடந்தாலும் இதுவே பெண்கள் குறித்த நிதர்சனமான உண்மை.

'' கல்யாணம் ஆகாத பெண்ணே! - உன்
கதிதன்னை நீதிச் சயம் செய்க கண்ணே!
வல்லமை பேசியுன் வீட்டில்- பெண்
வாங்கவே வந்திடு வார்கள்சில பேர்கள்;
நல்ல விலை பேசுவார் - உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்
கல்லென உன்னை மதிப்பார் - கண்ணில்
கல்யாண மாப்பிளை தன்னையுங் காட்டார்;
வல்லி உனக்கொரு நீதி ''இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்ச வேண்டாம் ''
- பாவேந்தர் பாரதிதாசன்

அஞ்சாதீர் பெண்களே ! நமக்கும் வாழ்வு ஒருமுறையே. மனதின் வலியினை வலிமையாக மாற்றி சாதியுங்கள். உலகம் உங்கள் வசமே.

**- மகாலெட்சுமி சிவானந்தம்**

# சாலையோர பிச்சைக்காரர்கள்

அன்பத்தனையும் இழந்து
அறிவென்பதனையும் ஒடுக்கி,

ஆகாரம் ஆசுவாசமாக்கி
இழப்பதற்கும் இழப்பற்று

ஈழக்கைதிகளைப்போல்
உயிர்களின் பார்வைத்தேடி
ஊண் கொண்டு
என்றோ ஒரு நாள் மாறுமென,

ஏதேதோ கனவு வரும் வேலையிலும்
ஐம்புலன்களிலும் உணர்வரியா பேதையாய்

ஒன்றா! இரண்டா !
ஓராயிரம் சங்கடங்களை வாங்கியபடி...
ஔடதம் பழகா கூட்டமாய்
ஃ என முடியாமல் புள்ளி வைத்து தொடங்குகிறது
சாலையோர சாப வாழ்க்கை..

சல்லடைச் சட்டையோடும்
சில்லறைத்
தட்டோடும்....,
விழிகளின் விரிசல்களில்
விடைதெரியா எத்தனை கேள்விகள்...

பதில்களை தேடா பகடைகளாய்.....

சாலையோர பிச்சைக்காரர்கள்....

- அகிலா தியாகராஜன்
ஆயக்காரன்புலம்

# வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி

பகுதி 3 : மன்னையின் பள்ளு இலக்கியம் – ’மன்னார் மோகனப் பள்ளு’

தமிழ் கூறும் இந்நல்லுலகிற்கு மன்னையின் மக்களில் பலர் மாபெரும் தொண்டாற்றியுள்ளனர். தமிழும், நம் மன்னை மக்களின் வாழ்வும் பின்னிப்பிணைந்த ஒன்று. இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம், திரு. கனகசபை அவர்களால் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டதும் நம் ஊரில் தான்.

இவ்வாறு கல்விக்கும், தமிழுக்கும் முக்கியத்துவம் தந்து வளர்த்த ஊர் நம் மன்னை என்றால் அது மிகையாகாது. நம் மன்னையின் மக்கள் பலரும் தற்பொழுது அறியாத, மன்னைக்கென்றே பிரத்தியேகமாக 350 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட ஓர் தமிழ் இலக்கியம் உண்டு. அந்த இலக்கியம் குறித்து தமிழ் புத்தாண்டாம் இந்த சித்திரைத் திங்களில், நம் மன்னை நண்பர்களுக்கு அறிமுகம் செய்ய இக்கட்டுரை எழுதுவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் கொள்கிறேன்.

சங்க காலத்தில் உழத்திப்பாட்டு என்று ஓர் இலக்கிய வகை உண்டு. மருத நில மக்களின் வாழ்வியலையும், விவசாய வழிமுறைகளையும் அடிப்படையாக கொண்ட இலக்கிய வகை அது. அதிலிருந்து சற்று மாறுபட்டு, மருத நில மக்களின் வாழ்வியல், அந்த பகுதியின் அமைப்பு, அந்த பகுதி மக்களின் வழக்கங்கள், காதல், குடும்ப வாழ்க்கை, விதை வகைகள், மாட்டின் வகைகள், பயிரின் வகைகள், உழவு முறைகள் என்று பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கிய ஓர் அட்சயப் பேழையாக உள்ளது தான் பள்ளு இலக்கியம்.

இந்த பள்ளு இலக்கியம் ஒரு 350 ஆண்டிற்குள்ளாக தோன்றியது தான். ஆனால், தமிழில் அதிக எண்ணிக்கையில் நூல்கள் உள்ள இலக்கியம் என்னும் பெருமையும் பள்ளு இலக்கியத்தையே சாரும்.

பொதுவாக இப்பள்ளு இலக்கியத்தில் உழவு செய்யும் மக்களான பள்ளர்களின் வாழ்க்கை கதையாக கூறப்பட்டிருக்கும். கதாநாயகன் பள்ளன்; கதாநாயகி பள்ளி. அவர்களின் பெயர்களும் இலக்கியத்தில் இடம்பெற்றிருக்கும். பள்ளு என்றாலே அனைவருக்கும் நினைவிற்கு வருவது ’முக்கூடற்பள்ளு’ தான். தமிழில் முதலில் தோன்றிய பள்ளு இலக்கியம் முக்கூடற்பள்ளு என்று பள்ளிக்காலங்களில் நமக்கு கற்பிக்கப்பட்டிருக்கும். ஆனால், முக்கூடற்பள்ளிற்கும் முந்தைய காலக்கட்டத்தில் தோன்றிய ஓர் பள்ளு இலக்கியம் உண்டு. வெளி உலகிற்கு அதிகம் தெரியாத பள்ளு இலக்கியம் அது. அது தான் நம் ஊர் இறைவனான ராஜகோபால சுவாமி மீது பாடப்பட்ட ’மன்னார் மோகனப் பள்ளு’ ஆகும். ஆனால், மன்னார் மோகனப் பள்ளில், பள்ளு இலக்கியத்திற்கு உண்டான சில இலக்கணங்கள் இல்லாத காரணத்தினாலும், உழத்திப் பாட்டின் இலக்கணத்தில் இருந்து சற்றே வேறுபட்டு இருந்ததாலும், இதை பள்ளு

இலக்கியத்தின் தோற்றுவாய் என்று அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். அப்படிப் பார்க்கையில் இந்த மன்னார் மோகனப் பள்ளு தான் பள்ளு இலக்கியங்களில் முதலில் தோன்றிய இலக்கியம் என்று கொள்ளலாம்.

மன்னார் மோகனப் பள்ளினை, எவ்வாறு முக்கூடற்பள்ளிற்கும் முந்தைய காலக்கட்டது என்று நிரூபிக்க முடியும் என்று நம் மனதில் கேள்வி எழலாம். இதற்கான விடை நம் மன்னார் மோகனப் பள்ளிலேயே உள்ளது. இந்த நூலில் ஓர் இடத்தில் 'பாராளும் விஜய ராகவ பூபன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய ராகவ பூபன் என்பவர், நம் மன்னை ராஜகோபால சுவாமி திருக்கோயிலை புனரமைத்து கட்டிய விஜய ராகவ நாயக்கர் ஆவார். இதில் 'பாராளும்' என்று குறிப்பிட்டப்பட்டுள்ளதால், இந்த மன்னார் மோகனப் பள்ளு அவர் ஆட்சி செய்த காலத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை எளிதாக அறிந்துக் கொள்ளலாம். அவரது ஆட்சிக்காலம் கி.பி. 1640 - 1674.

ஆகவே இந்த காலக்கட்டத்தில் தான் மன்னார் மோகனப் பள்ளு எழுதப்பட்டிருக்க வேண்டும். முக்கூடற்பள்ளின் காலம் தமிழறிஞர்களால் உத்தேசமாக கி.பி.1680 என்று கணக்கிடப்படுகிறது. ஆகவே முக்கூடற்பள்ளிற்கும் முன் தோன்றியது நம் மன்னார் மோகனப் பள்ளு என்பதை நாம் அறிந்துக் கொள்ள இயலும். மன்னார் மோகனப் பள்ளில், பள்ளு இலக்கியத்திற்கு உண்டான சில இலக்கணங்கள் இல்லாமல், பொதுப் பள்ளாக பாடப்பட்டுள்ளதால், இது முழுமையும் பள்ளு இலக்கியம் இல்லை என்பதும், ஆனால் பள்ளு இலக்கியத்திற்கான தோற்றுவாய் இந்த நூல் தான் என்பதும் கற்றறிந்த தமிழ் அறிஞர் பெருமக்களின் கருத்தாகும். எப்படியோ, பள்ளு இலக்கியத்திற்கு தோற்றுவாயாக இருப்பது நம் ஊருக்கென்று எழுதப்பட்ட மன்னார் மோகனப் பள்ளு என்பது எவ்வளவு மகிழ்ச்சியான ஒன்று!!

மன்னார் மோகனப் பள்ளினில் இராஜகோபாலர் 'செண்டலங்காரர்' என்று குறுப்பிடப்படுகிறார். முக்கூடற்பள்ளினில் கூட, ஒரு வரியில் நம் மன்னை இராஜகோபலனை பற்றி 'செண்டலங்காரர்' என்று கூறப்பட்டுள்ளது. அதாவது செண்டினை கையில் ஏந்தியவர் என்று பொருள் கொள்ளலாம்.

இனி இந்த மன்னார் மோகனப் பள்ளு இலக்கியம் பற்றியும், அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் குறித்தும் காணலாம். சிறப்புமிக்க இந்த மன்னார் மோகனப் பள்ளு நூலின் ஆசிரியர் யார் என்று அறியப்படவில்லை. இந்த நூலில் மொத்தம் 13 கண்ணிகள் (பாடல்கள்) அமைந்து உள்ளன. முதல் இரண்டு பாடல்கள் காப்புச் செய்யுட்கள். மீதம் உள்ள 11 பாடல்கள் 4 தலைப்புகளின் கீழ் இடம்பெற்றுள்ளன. அவை, ஆற்று வெள்ளம், மாட்டு வகை, விதை வகை, நடுகைச் சிந்து என்பனவாம். இதில் ஆற்று வெள்ளம், மாட்டு வகை, விதை வகை ஆகிய தலைப்புகள் தலா ஒரு பாடல்களை கொண்டுள்ளன. நடுகைச் சிந்தில் 8 பாடல்கள் உள்ளன. இந்த நூல் முழுமையும் கிடைக்கப்பெறவில்லை என்றும், மேலும் சில பாடல்கள் இருந்திருக்கக் கூடும் என்பதும் அறிஞர் பெருமக்களின் கருத்தாகும். கிடைத்த 13 பாடல்களிலுமே சில

வரிகள் இடையிடையில் இல்லை.

இந்நூலின் காப்புச் செய்யுள் மன்னை அருள்மிகு ராஜகோபால சுவாமி கோவிலில் உறையும் செங்கமலத்தாயார் மீதும், கிழக்கு கோபுரமான ராஜகோபுரத்தின் கீழ் வீற்றிருந்து அருளும் ஜெயவீர ஆஞ்சநேயர் மீதும் பாடப்பட்டுள்ளது. இந்த காப்பு செய்யுட்களில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று உள்ளது. இந்த இரு பாடல்களிலும், 'ராசை செங்காமலத்தாய் காப்பாம்', ராசை திகழநுமந்தன் காப்பாம்' என்று கூறப்பட்டுள்ளது. நாம் இப்பொழுது நம் ராஜமன்னார்குடியினை 'மன்னை' என்று சுருக்கி அழைப்பது போல், அக்காலத்தில் 'ராசமன்னார் கோவில்' என்று வழங்கப்பட்ட நம் ஊரின் பெயரினை சுருக்கமாக 'ராசை' என்று அழைத்துள்ளனர் என்பது தெளிவாகும். (செங்கமலத்தாயார் சந்நிதியில் கல்லினால் ஆன திருமஞ்சன மேடை ஒன்று இருக்கிறது. அதில் நம் ஊர் 'ராசமன்னார் கோவில்' என்று கல்வெட்டில் செதுக்கப்பட்ட்டுள்ளது. அடுத்த முறை கோவிலுக்கு செல்கையில் நம் ஊர் நாயக்கர்களின் காலத்தில் அழைக்கப்பட்ட பெயரினை அந்த கல்வெட்டில் கவனியுங்கள்). காப்பு செய்யுட்கள் இரண்டிலும் தலா நான்கு வரிகளாக, மொத்தம் எட்டு வரிகள் உள்ளன.

ஆற்று வெள்ளம், விதை வகை, நடுகைச் சிந்து ஆகியவற்றில், பாடல் ஒன்றிற்கு தலா பதினாறு வரிகள் இடம் பெற்றுள்ளன. மாட்டுவகை என்ற தலைப்பின் கீழ் உள்ள பாடலில் மட்டும் 18 வரிகள் இடம்பெற்றுள்ளன. இதில் கடைசி இரு வரிகள் உழவு செய்யும் மக்கள் மகிழ்ச்சியில் வாயினால் இசைக்கும் ஸ்ருதி போன்று உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த பாடல்கள் அனைத்திலும் முதல் ஆறு வரிகள் மன்னையில் ராஜகோபலனாக அருள்புரியும் திருமால் குறித்த புராண கதைகளை குறித்து கூறுகிறது. இந்த அனைத்துப் பாடல்களிலும் ஏழு மற்றும் எட்டாம் வரிகள் நம் ஊரின் புராணப் பெயரான தெட்சணத் துவராகையைக் குறிப்பிட்டு, பிறகு அதில் உள்ள வயல் குறித்து கூறுகிறது (ஆற்று வெள்ளம் தலைப்பின் கீழ் உள்ள பாடலில் மட்டும் 'வயலுளே' என்று கூறாமல் 'சோழ நாட்டிலே' என்று சோழ நாட்டின் பெருமை பேசுகிறது).

மற்றபடி, ஆற்று வெள்ளத்தின் கடைசி ஆறு வரிகள் ஆற்று வெள்ளம் ஏற்பட்டது குறித்தும், மாட்டுவகையின் கடைசி எட்டு வரிகள் மன்னையில் அக்காலத்தில் இருந்த மாட்டு வகைகள் குறித்தும், விதை வகையின் கடைசி ஆறு வரிகள் அக்காலத்தில் மன்னையில் புழக்கத்தில் இருந்த விதை வகைகள் குறித்தும், நடுகைச் சிந்தின் அனைத்து பாடல்களின் கடைசி ஆறு வரிகளும், பள்ளன் ஒருவனின் காதல் கதையையும், அதன் தொடர்ச்சியாக அவன் வாழ்வில் நடந்தேறிய சில மோதல்களையும், அவனது திருமணத்தையும் கூறுகிறது. இதில் நிறைய கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

காப்பு செய்யுட்கள் தவிர மீதம் உள்ள பாடல்கள் அனைத்தும், 'பள்ளீரே' என்று முடிவது குறிப்பிடத்தக்கது.

மாட்டு வகையில், மயிலைக் கறுப்பன், ஒரு கொம்பன், பவித்திரக் கொம்பன், உழவுக்கிளையவன், முன்னேரழகன், பனங்காய்க் கறுப்பன் போன்ற மாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

விதை வகையில், சம்பாக் கறுப்பன், ஒழுகு புழுகு சம்பான், காடைக் கழுத்தன், கல்லுண்டை, திங்கட்பாழி, வண்டாங்குருவை, கார்பசானம் போன்ற விதை வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த மன்னார் மோகனப் பள்ளு நூலினை pdf வடிவில் தரவிறக்கம் செய்ய அடுத்து வரும் இணைய முகவரியை சொடுக்கவும் http://maintharkal.mannai.in/wp-content/uploads/2019/04/mannaar-mohanap-pallu.pdf

மன்னையின் வரலாறு தொடரும்...!

தகவல் உதவி : 'தமிழ் நூலகம்' பதிப்பகம் மூலம் திரு. மு. அருணாசலம் அவர்கள் பதிப்பித்த 'முக்கூடற்பள்ளு' நூலின் இரண்டாம் பதிப்பு. (ஆண்டு 1949)

நூல் உதவி : திரு. பொன் கார்த்திகேயன்

எழுத்தாக்கம் :
அபிராமி பாஸ்கரன்



# வெளிநாட்டு வாழ்க்கை - நம் தேசம் குடுத்த வ(லி)ழி

வணக்கம்

சிறு வயதில் இந்த உலகம் நமக்கு சொல்லி குடுப்பது நல்ல படிச்சா வெளிநாட்டில் நல்ல வேலையும் , கை நெறைய சம்பாத்தியமும் கிடைக்கும் என்று தான் எங்களை வளர்த்தது.

நல்ல படித்தும் சாதிக்கும் கனவோடு வந்தோம் வெளிநாட்டிற்கு.

வந்த பிறகு தான் புரியும் ஏன் படித்தோம் என்று.

முன் பின் தெரியாத நபர்கள் , புரியாத மொழிகள்ஞ் ஏதோ ஒரு பைத்தியக்கார கூட்டத்தில் இருப்பது போல உணர்வோம்.

அதும் ஆங்கிலம் தெரியாத நபரின் நிலைமை இன்னும் மோசம்.

படித்ததிற்கும் இங்கே கொடுக்கும் வேலைக்கும் துளி அளவுக்கு சம்பந்தம் இருக்காது.

மாடு போல உழைப்போம்.

மூன்று வேல உணவில் இரண்டு வேல உணவை டி ஆக்கிரமிக்கும்.

சரியாக தூக்கும் இல்லாமல் நாட்களை நகர்த்துவோம்.

மாதம் முடிந்து கையில் ஊதியம் வந்ததும் பட்ட கஷ்டம் எல்லாம் நீங்கி போகும்.

அம்மா அப்பாக்கு உடல் நிலை சரி இல்லாதபோது அருகில் நின்று கவனித்து கொள்ள மனம் துடி துடிக்கும்.

பிள்ளைகள் ஓடி விளையாடும் தருணத்தை பார்க்கும்போது கைகள் கட்டி அணைக்க துடிக்கும், ஆனால் அணைக்க முடிந்ததோ வீடியோ காலில் மட்டும் தான்.

இங்கேய நங்கள் தொலைப்பது நாட்களை மட்டும் இல்லை எங்கள் வயதையும் , சந்தோஷத்தையும், பாசமும் தான்.

இரண்டு வருடத்திற்கு பிறகு ஒரு மாத விடுமுறை.

சொந்த நாட்டிற்கு வந்து விமான நிலையத்திலிருந்து வெளிய வருவதற்கு காத்திருக்கும் நொடிகள் தான் உலகின் மிக கொடுமையான வலி.

நொடிகளைவிட வேகமாக நகரும் இந்த ஒரு மாத விடுமுறை.
குடும்பத்தினரை பிரிந்து விமான நிலயத்தினுள் நுழையும் பொழுது அந்த தருணத்தில் பெண்ணின் பிரசவத்தில் ஏற்படும் வழியை போல  ஒரு ஆண் மகனுக்கு மனதினுள் வலி ஏற்படும்.

வெளிநாட்டு சம்பாத்தியத்தில்  பணம் ,சொத்து எல்லாம் வரும் கூடவே சுகர் , பிபி, கோலெஸ்டெரோல் எல்லாம் வரும்.

குடும்பத்தினர் தெரிந்தவர்களிடம் அனுப்பும் பர்ஸலில் மாத்தறை இல்லாத பர்ஸலே இருக்காது.

இவளோ கஷ்ட பட்டு ஏன் வெளிநாட்டில் வேலை செய்ய போக வேண்டும் என்று தான் பலரின் கேள்வியாக இருக்கும்.

ஏதோ ஒரு சூழ்நிலையில் தான் தள்ளப்படுகிறோம்.

கல்வியை வியாபாரம் ஆக்கும் இந்த சமுதாயம் நல்ல படிச்சா நல்ல இருக்கலாம்னு சொல்லிகுடுத்து தவிர நல்ல உழைத்தால் நல்ல இருக்கலாம்னு சொல்லித்தரவில்லை.

கடந்த காலத்தில் நம் நாட்டில் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை அதன் வெளிநாட்டிற்கு வேலைக்கு வந்தேன் என்று கூறுவார்கள் தற்பொழுது உழைக்க ஒரு வேலை இல்லை என்று தான் பலபேர் வெளிநாடு செல்ல நேரிடுகிறது.

வெளிநாட்டில் வேலை செய்யும் ஒருவர் தனக்காக வாழ்ந்த நாட்களை விட தன் குடும்பத்திற்காக தொலைத்த நாட்களே அதிகம் ஸ்ரீ

நம் தலைமுறையோடு நிற்கட்டும் இந்த வெளிநாட்டு வாழ்கை!!!

அடுத்த தலைமுறை தலை நிமர்ட்டும் நம் நாட்டில் !!!

## - ச. ஷபியுல்லாஹ்
மன்னார்குடி

# பத்துமணி பசு

அமாவாசை வந்துதுன்னா
கேவுருமாவ கிண்டிகிணு
ஓட வேண்டியதுதான் கொல்லிக்கு
ஒரு பொழுதிருக்கும் தாத்தா
அரைகுண்டான் மாவ
அசராம துன்னுட்டு
ஏரோட்டப் போயிடுவாறு
கொறையெதும் சொல்லாம
அப்புறம் மத்தியானம்
வீட்டுக்குவந்து சாமி கும்பிட்டா
எல்லாரும் சேர்ந்துண்போம்
குதிரைவாலி அரிசிசோறு...

காலையில பழங்கஞ்சி
மத்தியானத்துக்கு கம்பங்கூழு
இராத்திரிக்கு கேவுருகளி
வரகரசிப் புளிச்சோறு
இட்லி வடை தோசையெல்லாம்
தீபாவளி பொங்கலப்பதான்
கண்ணுல பார்க்க முடியும்
அந்தக்காலத்துல....

எல்ம்பது வயசுவரைக்கும்
சுகரு பீப்பியில்லாம
தெம்பா இருக்கன்னா
அப்பத்துண்ண சாப்பாடுதான்
சாமசோறு வரவுசோறு
சோளக்கூழு கேவுருவடை ....

எப்பப் பார்த்தாலும்
சோத்தையும் இட்லியும்
தோசையும் துன்னுட்டு
வராத நோயை
வாவவான்னு கூப்பிட்டு
ஆசுபத்திரியும் மருந்துன்னு
அலைஞ்சி கெடக்கிறீங்கன்னு
ஒருகொட்டா ஆட்ட
ஒன்டியா ஓட்டிக்குன்னு
தெருவெல்லாம் வசைபாடி
தெம்பாகப் போகும்
நடுவந்தூர் பாட்டியப்பார்த்துப்
பொறாமையோட காத்திருக்கன்
முப்பது வயசிலேயே
சுகரு பீப்பி மாத்திரை வாங்கிவர
பத்துமணி பசுக்கு!

## பொன்.தெய்வா
ஐவேலி
8940181811

# வீரனே...

உறக்கம் துறந்து உணவை மறந்து எல்லையில் நீர் சிந்தும் இரத்தம்...
இங்கு நாட்டிற்குள் யாவரும் செய்ய இயலாது தியாகம்...

நீர் எல்லையில் சற்று உறங்கினாலும் உன்னையன்றி எங்களையும் கருவருக்க காத்திருக்கும் எதிரி படை....

அவைகளுக்கு எதிரில் நீ உன் உயிரை துச்சமென எண்ணி நிற்பதால் தான்

நாங்கள் இங்கே நிம்மதியாக உறங்க செல்கின்றோம்...
எத்துனை ஆயுதங்கள் கொண்டு வந்தாலும் எதிர்த்து நிற்கும் உன் வீரம்....

பலகோடி உயிர்களை காக்கும் உம் கர்வம்...

வாழ்த்துவதற்கும் போற்றுவதற்கும் உரியது...


வீட்டைக் காப்பாற்ற துடிக்கும் மனிதர்கள் மத்தியில் எங்களுடன் சேர்த்து நாட்டையும் காப்பாற்றும் உன் வீரம் போற்றத்தக்கது

வாழ்க்கையில் வசதி வேண்டும் நன்றாக வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டும் எங்களுக்கு.

எங்கள் உயிரை காப்பாற்ற எல்லையில் இரத்தம் சிந்தும் நீ ஒரு உண்மையான கடவுள்......

எழுத்துரு எண்ணம்
பா.மாதவன்
இராஜமன்னார்குடி....





## மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 12)

# செண்பக வனம்

அருண்மொழித்தேவர் மற்றவர்களையும் நிறுத்த சொல்லி ராஜபாட்டையின் பக்கவாட்டில் உள்ள புதருக்குள் குதிரைகளை மறைத்துவிட்டு தாங்களும் மறைந்து கொண்டனர் . ‘‘இளவரசே என்னவாயிற்று‘‘? என்று கேட்ட சசிதரனை சப்தம் ஏற்படுத்தாமல் அமைதி காக்குமாறு சைகை செய்துவிட்டு எல்லோரும் புதருக்குள் மறைந்து கொண்டார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் சோமன் அவர்களை கடந்து ராஜபாட்டையில் வெகுவாக வேகமாக சென்றான். அவன் சென்று மறையும் வரை காத்திருந்த இளவரசர் சோமன் மறைந்தவுடன், சசிதரா, இவன் நம்மை காலையில் இருந்து பின் தொடர்கிறான் என்று கூறிக்கொண்டே இளவரசர் அருண்மொழித்தேவர் அவர்களின் குதிரைகளை ஆராயத் தொடங்கினார். இளவரசர் மதுராந்தகர் பயணித்த குதிரையின் பக்கவாட்டில் அவர் கண்ட காட்சி அவருக்கு கோவம் வர செய்தது....

அதனை கண்ட மதுராந்தகன்
‘‘அண்ணா மன்னிக்க வேண்டும். நீங்கள் எனக்கு பரிசாய் தந்த இந்த உடைவாளை மருதனிடம் கொடுக்க மனம் வரவில்லை. அதனால்தான் அதனை சீலையில் சுற்றி மறைத்து தான் எடுத்து வந்தேன். ஆனால் நாம் வந்த வேகத்தில் மறைத்து வைத்திருந்த சீலை விலகி கைப்பிடி வெளியே தெரிகிறது அண்ணா‘‘ என்றார்.

‘‘புலியின் தலை போன்ற வேலை பாடுடைய கைப்பிடி கொண்ட இந்த உடைவாள் இந்த சோழநாட்டில் உன் ஒருவனிடம் மட்டும் தான் உள்ளது என்பது உலகறிந்த உண்மை. அதனை கையில் வைத்துகொண்டு நீ மாறுவேடமிட்டு என்ன பயன். இனி கவனம் கொள்‘‘ என்று மதுராந்தகனை கடிந்து கொண்ட இளவரசர் அருண்மொழி தேவர் சட்டென குதிரை மீதேறி என்னை பின் தொடருங்கள் என்று மற்றவர்களுக்கு கட்டளையிட்டு விட்டு, அந்த ராஜபாட்டையின் குறுக்கே உள்ள ஒற்றையடிப் பாதையில் தன் குதிரையை செலுத்தினார்.

வெகு வேகமாக குதிரையை செலுத்திக்கொண்டு ராஜபாட்டையில் சென்றுகொண்டிருந்த மாறுவேட காரனான சோமனுக்கு சட்டென ஒரு சந்தேகம் உண்டானது. குதிரையின் வேகத்தை குறைத்து கூர்ந்து கவனித்தான். ஆனால் அவன் செவிகளுக்கு தூரதூரம் வரை குதிரைகளின் காலடி  சப்தங்கள் கேட்கவில்லை. ‘‘ஐயோ என்ன பிழை  செய்துவிட்டோம் இப்படி தவற விட்டுவிட்டோமே! எங்கு சென்று இருப்பார்கள்?‘‘ என்று தனக்குத் தானே பேசிக் கொண்ட சோமனுக்கு சற்று தூரத்தில் ஆட்டு மந்தையையும் அதனருகே  அதற்கு காவலாய் இரண்டு இடையர்களும் இருப்பதை கண்டான்.

அவர்கள் அருகே சென்றவன் . ‘‘ஐயா பெரியவரே இந்த பக்கமா நாலு பேரு குதிரையில போனாங்கல?‘‘ என்றான்.
அதற்கு அந்த பெரியவர்‘‘ இல்லயே தம்பி இன்னைக்கு காலைலேருந்து ஒரு கழுதை கூட இந்தபக்கம் போகல அப்புறம் எங்க குதிரை போறது‘‘ என்றார்.

செய்வதறியாது குழம்பி நின்ற சோமனை கண்ட பெரியவர் ‘‘தம்பி நீங்க வந்த வழியிலேயே கொஞ்ச தூரம் பின்னாடி போன அங்கு ஒரு அரசமரம் இருக்கும். அந்த அரசமரத்துக்கு பக்கத்துல கிழக்கு நோக்கி  ஒரு ஒத்தையடிப் பாதை போகுது, அதுல வேணும்னா  நீ தேடி வந்த ஆளுங்க போயிருக்கலாம். அங்க போய் பாரு‘‘ என்றார். அதை கேட்ட சோமன் குதிரையைத் திருப்பிக் கொண்டு அந்த பெரியவர் சொன்ன இடத்திற்கு குதிரையை விரட்டினான். சரியான நேரத்தில் நல்ல தகவல் தந்த பெரியவருக்கு அவனும் ‘‘நன்றி‘‘ சொல்லவில்லை அவரும் அதை எதிர்பார்க்கவில்லை.

சோமன் அந்த ஒற்றையடிப்பாதையை கண்டுபிடித்து அவனும் வேகமாக தனது குதிரையை செலுத்திக்கொண்டு கண்டராதித்த புறத்தை அடைந்தான்‘‘ இப்போது இவர்களை எங்கே தேடுவது என்று அவனே அவனை கேட்டுக் கொண்டான் தன் மனதிற்குள்.

காலையிலிருந்து அங்கும் இங்குமாக அவனை தூக்கி சுமந்து அலைந்து கொண்டிருந்த அவனது குதிரைக்கு மிக்க தாகமெடுத்தது போலும், அந்த சாலையோரத்து நீர் நிறைந்த குளத்தை கண்டதும் சோமனின் கட்டுப்பாட்டையும் மீறி குதிரை குளத்திற்குள்ளேயே இறங்கியது. குதிரையின் தாகத்தை உணர்ந்தவனாய் சோமனும் குதிரையிலிருந்து இறங்கி அதற்கு தண்ணீர் காட்டினான். அப்போது அங்கே  மாட்டைக் குளிப்பாட்டி கொண்டிருந்த இரண்டு முதியவர்கள் அவர்களுக்குள் பேசிக் கொண்டதிலிருந்து ‘‘திருவண்ணாமலையிலிருந்து யாரோ அரச குடும்பத்தார் ஒருவர் கண்டராதித்த புறத்திற்கு வந்திருப்பதாகவும்,  உச்சி உணவிற்குமேல் இங்கிருந்து திருக்கோவிலூர் சென்று அங்கிருந்து தஞ்சை புறப்பட உள்ளதாகவும் அறிந்து கொண்டான் ‘‘சோமன். தான் தேடி வந்த விஷயம் இத்தனை எளிதில் தெரிந்து கொண்டதை எண்ணி சற்று சந்தோஷப்பட்டான். அதற்கு காரணமாயிருந்த குதிரைக்கும் இதமாய் வருடி கொடுத்தான்.

அந்த இதமான வருடலுக்கு மயங்கிய குதிரையும் பாசமாய் கனைத்தது.

சோமனின் மனதிற்குள் அப்போது கொடூரமான வேறு திட்டங்கள் உதயமாகி இருந்தன. அதனை நடத்தி முடிக்க அவன் மீண்டும் முச்சந்தி சத்திரத்திற்கு செல்ல வேண்டும். ஆகவே வந்த வழியாக சென்றால் தான் சரியாகும் என்று நினைத்தவன்.

அவன் வந்த அதே ஒற்றையடிப் பாதையில் குதிரையைச் செலுத்தினான்.

சோமனை பின்தொடர்ந்து கொண்டிருந்த நமது ரகசிய ஒற்றனான ருத்ரன் முச்சந்தி சத்திரத்தின் அருகிலேயே அவனை  தவறவிட்டுவிட்டார். அதனாலேயே எங்கு போய்க் கொண்டிருப்பான் என்று தேடி அலைந்து கொண்டு ராஜபாட்டையில் வந்து கொண்டிருந்த ருத்ரனும் கண்டராதித்த புறத்திலிருந்து ஒற்றையடிப்பாதையில் மிக வேகமாய் வந்து கொண்டிருந்த சோமனும் திருக்கோவிலுரூக்கான   ராஜபாட்டையில் இணையும் தருணத்தில் நேர் எதிராய் சந்தித்துக்கொண்டனர். இதனை சற்றும் எதிர்பாராத ருத்ரன் வியந்தும் பயந்தும் திகைத்து காட்டிய அவன் முக பாவனையில் சோமனுக்கு சந்தேகம் எழுந்தாலும் அவன் மேற்கொண்டிருந்த அவசர வேலையின் காரணமாக வேகமாக ருத்ரனை கடந்து சென்றுவிட்டான்.

சுதாரித்துக்கொண்ட ருத்ரனும் திருக்கோவிலூரை நோக்கி செல்வது போல பாவனை செய்து சற்று தூரம் சென்றான். பிறகு குதிரையைத் திருப்பிக் கொண்டு முச்சந்தி சத்திரத்தை நோக்கி ருத்ரனும் சென்றான்.
ருத்ரன் முச்சந்தி சத்திரத்திற்கு சென்று சேர்வதற்குள் அங்கு ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை கண்டவன், சோமனை தேடி அங்குமிங்கும் அலைந்தான். ராஜபாட்டை அருகில் வளர்ந்திருந்த காடுகளுக்கு நடுவே சற்று தொலைவில் சுமார் ஒரு ஐம்பது அறுபது ஆட்களுடன் சோமன் எதையோ பேசிக் கொண்டிருந்தான். அவர்கள் பேசிக் கொண்டிருப்பது என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ள மெல்ல அவர்கள் இருந்த இடத்திற்கு அருகே மறைந்து மறைந்து சென்றான் ருத்ரன். அவர்களின் பேச்சுக் குரல் கேட்கும் தூரத்தில் பாதுகாப்பாய் பதுங்கி கொண்டு ஒட்டுகேட்டலும் சில பேச்சுக்கள் தெளிவாக கேட்கவில்லை

எனினும்

‘‘அங்கு உள்ளவர்களில் இருந்து ஒரு சிறிய குழு பிரிந்து சென்று திருக்கோவில் இருக்கும் கண்டராதித்த புறத்திற்கும் இடையே உள்ள ராஜபாட்டையில் பதுங்கி இருந்து யாரையோ  தாக்கி சிறைபிடிப்பது என்றும் மற்றவர்கள் இங்கிருந்து கொண்டு இன்று செய்ய காத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது என்று புரிந்து கொண்டான்.‘‘

சோமன் கூடிய கூட்டத்தினர் கலைந்து செல்லும் வரை காத்திருந்த ருத்ரன் மெல்ல அங்கிருந்து நகர்ந்தான்.

இவர்களின் திட்டத்தை முதலில் இளவரசரிடம் சேர்க்க வேண்டும் அதற்கு முன்னதாக அந்த சதிகாரன் கையில் பச்சை குத்தி இருந்த படத்தை வரைந்து கொண்டு எடுத்துச் செல்ல வேண்டும் என்று தனக்குத்தானே மனதிற்குள் பேசிக்கொண்டு ருத்ரன் சத்திரத்தின் பின்னால் இருந்த தனது அறைக்கு சென்றான்.

அங்கு கயிற்றில் உலர்ந்து கொண்டிருந்தவெள்ளை நிற இடுப்புக் கச்சையை எடுத்து சிறு துண்டாக கிழித்து அடுப்பு கரியின் உதவியால் சோமனின் கையில் பச்சை குத்தி இருந்த உருவத்தை
போலவே அந்த துணியில் வரைந்து கொண்டிருந்தான்.

அடடே நீ இத்தனை அற்புதமாக ஓவியம் வரைவாயா? என்று அவன் பின்னாலிருந்து ஒரு கனத்த குரல் கேட்டது. பயந்து பதறி திரும்பி பார்த்த ருத்ரன், சுதாரிப்பதற்குள் முன்னால் அவனது வயிற்றில் ஒரு நீண்ட வாள் இறங்கியது. ‘‘ஒற்றனையே ஒற்றுபார்க்கிறாயே தம்பி ‘‘என்று சொல்லிக்கொண்டே ருத்ரனின் வயிற்றில் இறக்கிய வாளை வெளியே உருவினான் சோமன்.

வலியால் துடித்து மயங்கி சரிதான் ருத்ரன்.

அந்த அறையில் உள்ள எல்லாப் பொருட்களையும் ருத்ரனின் மீது போட்டு அவனை உடலை மறைத்து விட்டு வெளியே சென்று வெளிப்புறமாக அந்த அறையின் கதவை தாளிட்டு சென்றான் சோமன்.

சோமன் சென்ற சற்று நேரத்தில் சட்டென கண்விழிதான் ருத்ரன். வயிற்றின் விலாப் பகுதியில் வழிந்து கொண்டிருந்த ரத்தத்தை ஒரு கையால் அமர்த்தி பிடித்துக்கொண்டு சோமனின் பச்சை குத்தப்பட்டிருந்த வரைபடத்தை அங்குமிங்குமாக தேடி கண்டுபிடித்து எடுத்து தனது இடைக்கச்சையை பத்திரப்படுத்திக்கொண்டு வேறொரு துணியால் தான் வயிற்றில் குத்தப்பட்ட இடத்தில் இறுக கட்டிக்கொண்டு.

அவன் அறையில் அவனே ஏற்படுத்தி வைத்திருந்த ரகசிய துளையின் மூலமாக வெளியேறி. தன் குதிரையில் கண்டராதித்த புறத்தை நோக்கி உயிரை கையில் பிடித்துக் கொண்டு பறந்தான்.

ருத்ரன் இளவரசரை கண்டானா?....

தொடரும்..........

# எவன்டா எவன்டா எங்கள எதுக்க எவன்டா

வரன்டா வரன்டா நீதியை கேட்டு வரன்டா

எமன்டா எமன்டா உங்கள எதுக்கும் எமன்டா
வரன்டா வரன்டா  விவசாயி மகன் வரன்டா

வேண்டா வேண்டா மீத்தேன் கேட்டது எவன்டா
தன்டா தன்டா தப்பு தன்டா  இனி இங்க வேண்டா

வேண்டா வேண்டா நியூட்ரினோ கேட்டது எவன்டா
போட போடா பொத்திக்கிட்டு போடா

வேண்டா வேண்டா ஹைட்ரோகார்பன் கேட்டது எவன்டா
மிதிடா மிதிடா இனி மண்ண தொட்டா மிதிடா

வேண்டா வேண்டா அணுவுல கேட்டது எவன்டா அடிடா அடிடா இனி உள்ள வந்தா அடிடா

எவன் டா எவன் டா எங்களை எதுக்க
எவன்டா
ஊருக்கே சோறு போடும்
விவசாயி மகன் டா

வரான்டா வரான்டா நீதி கேட்டு வரான்டா
எவண்டா எவன்டா எங்களை தடுக்க எவன்டா

ஆடுவோம் வேட்டை
காட்டுவோம் சேட்டை
இது விவசாய கோட்டை
எங்ககிட்ட வச்சு கிட்டா
ஆக்கிடுவோம் மட்ட

வீரத்தின் விளை நிலம் நாங்க
வீணா சீண்டி பாக்காதிங்க
தேரோட்டி போர் புரிஞ்சோங்க
அதை விட்டு தான
ஏரோட்டி வயலில் தான் கால் பதிச்சோங்க

மரணமே துச்சமடா
மானமே மிச்சமடா
படைகள் சிதறிட
குருதி தெரித்திட
போர்களம் பல
கண்டோமடா
சிறையரை எங்கள் ஓய்வரைடா
நாங்கள் கட்டுகடங்கா
ஆழிப்பேரலைடா
உரிமை பெரும் வரை
ஓய்வில்லைடா

சேருவோம் தோழோடு.
சீருவோம் வாளோடு
விடியல் வரும் இன்றோடு
வீதிக்கு வந்து போராடு

போய்டு என் மண்ணை விட்டு
உயிர் போய்டும் உன்ன விட்டு
வருவோம் நெஞ்ச நிமித்திக்கிட்டு
மூடிக்கிட்டு  நடைய கட்டு
தலைமுறை காக்க தலை
எடுப்போம்
இளைஞர் நாம் படை எடுப்போம்
புது சரித்திரம் படைத்திடுவோம்
மண்ண தொட்டா
மிதித்திடுவோம்

மண்ணு நமக்கு மற்றது எதுக்கு
அச்சம் எதுக்கு உழவு இருக்கு
மீசைய முறுக்கு எதிரிய நொறுக்கு
எதிரிக்கு கிறுக்கு எடுடா சுளுக்கு
இவங்க மத்தியிலே நிதியுமில்லே
நீதியுமில்லே
தமிழா நீ
நீ வேடிக்கை பார்த்தால்
வீழ்வது நிச்சயம்
நீ வீதிக்கு வந்தால் வெல்வது நிச்சயம்



அருள்பாண்டியன்
பூவனூர்

இந்த பாடலை
தயாரிக்க
உதவ விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்

**8973204042,
7448971226**

# கல்லெடுத்தல்



திருச்சி பார்த்தி

நாட்டிற்காக ஊரிற்காகவோ, அல்லது தன் குடும்பத்திற்காகவோ, பெருவீரம் காட்டி இறப்போரை, மக்கள் மறவாது வணங்கினர். அவ்வாறு இறந்தோர் நினைவாய் கல்லெடுத்து வணங்கும் வழக்கத்தை நம் முன்னோர் போற்றிவந்துள்ளதற்கு பல சான்றுகள் நம்மிடையே உண்டு. தற்காலம் வரையிலுமே தம் குடும்பத்தில் எவரேனும் இறந்தால், அவர் நினைவாய் நீத்தார்கடன் செலுத்தும்போது கல்லை வைத்து, அதனைச்சுற்றி அவர் உடுத்திய உடை, அவருக்கு பிடித்த உணவுப்பொருட்களை படைக்கும் வழக்கம் பெருமளவில் காணப்படுகிறது! அதற்கு ‘‘கல்லெடுத்தல்‘‘ என்று பெயர்.

தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில் இவ்வகை மரபை ஆறு வகை நிலைகளாய் பிரிக்கிறார்,

‘‘காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்- சீர்த்தரு சிறப்பின் பெரும்படை வாழ்தல்‘‘

இந்த ஆறுநிலை கூறுகளும் நடுகல் குறித்து வருபவையே,
இதிலுள்ள பெரும்படையும், வாழ்த்தலும் நடுகல் வழிபாட்டை குறிப்பதாகும்.

இதனடிப்படையிலேயே நடுகற்கள் எழுப்பியுள்ளனர்.
முதலில் கல்லெடுக்கும் நிலையில் இருந்து படிப்படியாய் வழிபடும் நிலைக்கு நடுகல் வழிபாடு உயருகிறது.

நடுகல் எடுக்கும் முறை:

தொல்காப்பியம் கூறும் ஆறு கூறுகளை ஆராய்ந்தால், அதில் நடுகல் எடுக்கும் முறைகுறித்து வருவதை உணரலாம்.
1.(காட்சி)வீரனுக்கு நடுகல் எடுக்க விரும்புவோர், நல்லவகையான கல்லைத்தேடி செல்வர்.
2.(கால்கோள்) கல்லைத்தேடி தேர்ந்தெடுத்தவுடன், மாலையிட்டு, மதுவுமிட்டு அக்கல்லை கொண்டுவருதல். கல்லைக் கொண்டுவரும்பொழுது பறையிசை ஒலிக்க எடுத்து வருதல்.
3.(நீர்ப்படை) கல்லை கொண்டுவந்த பின், அதனை நீர்நிலைப்பகுதியில் கிடத்தி அக்கல்லினை முதலில் குளிர்வித்தல், கல்லின் வெம்மை தனிந்தபின், அக்கல்லில் இறந்தவரின் பெயர், குலம், என்ன காரணமாய் இறந்தார் என்பதனை எழுத்தாக வெட்டுதல்.
4.(நடுதல்) கல்லை வடிவுபடுத்தி, எழுத்து பொறித்தபின் செம்மறியாடு பலியிட்டு,

மலரும் மதுவும், மயிற்பீலியும் அலங்கரிக்க அக்கல்லை நடுதல்.
5.(பெரும்படை) நட்டக்கல்லிற்கு கோவில் எழுப்பி கூரை அமைத்து வழிபடுதல்.
6.(வாழ்தல்)இறந்தவர் வழியினரும், நட்டவரும் நடுகல்லை வணங்குதல்.

பல சங்க இலக்கிய நூல்களும் நடுகல் வழிபாட்டை எடுத்துயியம்புகின்றன. பெருங்கற்கால சின்னங்கள் பலவற்றிலும் இவ்வகை கூறுகள் காணப்படுகிறது!

அகநானூற்று பாடலில் ஒன்றில்
''உயர்பதுக்கை'' என்ற சொல்லைகுறிக்கிறது. பதுக்கையானது உயரமாக இருப்பதனால் இவ்வாறு அழைத்தனர்.

''சிலைஏ றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கை இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்
கரனிடை விலங்கிய மரன்ஓங்கு இயவின்''

ஆறலைகள்வர் வில்லில் கோர்த்து எய் அம்பினால் வழிப்போக்கர் இறந்துபட்டனர். அவர்தம் உடலை மூடிய உயர்ந்த கற்குவியல்களில் காட்டுமல்லிகை ஏறிப்படரும். அத்தகைய நடுகல்லாகிய தெய்வத்திற்கு நாட்பலியிட்டு வழிபடுவர். இப்பாடல் உயர்ந்தபெரும் பதுக்கையை கூறுகிறது!

மற்றொரு பாடல்
''இருங்கேழ் இரலை சேக்கும்
பரல் உயர்பதுக்கை
கடுங்கண் மழவர் களவு உழவு''
என கூறுகிறது!

இவ்வுயர்பதுக்கையிடையே மறைந்து அஞ்சாமையுடைய மழநாட்டார் உழவுபோல் களவுசெய்ய இடமாய் அமைந்தது என தெரிவிக்கிறது.

படத்தில் காணப்படும் பதுக்கை இவ்வகை உயர்பதுக்கை வகையைச் சார்ந்ததே.





# முன்னோட்டம்....

‘ஆக மொத்தத்துல சாதிதான் முக்கியம்.?’

‘கண்டிப்பா.!’

‘பெத்தப் பொண்ணவிட சாதிதான் வேணும்.?’

‘ஆமா.’

‘வேற எதுவும் முக்கியமில்ல.?’

‘இல்ல.’

‘பொண்ணு வேற சாதி பையனக் கட்டக்கூடாது.?’

‘ஆமா. அப்படி மட்டும் கூடவே கூடாது.’

‘அதத் தடுக்க என்ன வேணாலும் பண்ணுவிங்க.?’

‘பெத்தப் பொண்ணுன்னாலும் கொன்னு போடுவிங்க.?’

‘பெத்தப் பொண்ணென்ன பெத்தப்பொண்ணு.? எங்க சாதில எந்தப் பொண்ணையும் சரி, வேற சாதிக்காரனோட சேரவே விடமாட்டோம்.’

‘நிஜமாவா.? எந்தப் பொண்ணையுமா.?’

‘எந்த பையனையும்கூட விடமாட்டோம்.

வரும் இதழில் இருந்து புதியதொரு தொடர்...

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

Thiravukolmagazine